# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 29 செவ்வாய்க்கிழமை 11.02.2025 கதிர் 124










# தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்

## இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பம் நாளை மாலை 6 மணி வரை தொடரும்


யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணம் – தையிட்டி சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை உடனடியாக அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும், சட்டவிரோதமாகக் கையகப்படுத்தப்பட்ட காணிகளை உரிமையாளர்களிடம் உடனடியாகக் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் இன்று மாலை 4 மணிக்குக் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

7➤

## நாளை மின்வெட்டு இல்லை

### இன்று அமுலாகும் நேரங்களில் மாற்றம்



கொழும்பு, பெப். 11

நாளை புதன்கிழமை மின் வெட்டு அமுல்படுத்தப்படாது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.


மின்வெட்டைத் தொடர்ந்தும் அமுல்படுத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து நாளை மின்வெட்டை அமுல்படுத்துவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

7➤

## தமிழர் பகுதிகளில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் பௌத்த – சிங்கள மயமாக்கலை உடனே நிறுத்துக!

### அநுர அரசிடம் சுரேஷ் இடித்துரைப்பு



யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். தையிட்டியில் சட்ட விரோதமாகத் தனியார் காணியில் கட்டப்பட்ட புத்த கோயிலை இடிக்க முடியாது என்று அநுர அரசு தெரிவித்துள்ள கருத்துக்குக் கண்டனம் வெளியிட்டுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன், தமிழர் பகுதிகளில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்தமயமாக்கல், சிங்களமயமாக்கல் திட்டங்களை நிறுத்தும்படியும் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

“2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் சிங்கள மக்களோ பௌத்த

7➤

## வெள்ளியன்று விசேட சபை அமர்வு



கொழும்பு, பெப். 11

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்மானத்தை சபாநாயகர் நாடாளுமன்றத்திற்கு அறிவிக்கும் நோக்கில் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு

7➤

## வவுனியா பசார் கடைத் தொகுதியில் ஆண் ஒருவரின் சடலம் இன்று மீட்பு!


வவுனியா, பெப். 11

வவுனியா, பசார் வீதியில் உள்ள கடைத் தொகுதியில் இன்று காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று வவுனியா பாலிஸார் தெரிவித்தனர்.

பசார் வீதியில் உள்ள மாடிக் கட்டடத் தொகுதியின் கீழ் பகுதியிலேயே இந்தச் சடலம் மீட்கபட்டுள்ளது.

குறித்த கடைத் தொகுதியின் மாடியில் தங்கியிருந்தவரே இவ்வாறு சடலமாக மீடகப்பட்டுள்ளார்.

7➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# உணவு கட்டமைப்பை வலுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு , பெப். 11

வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இரண்டாவது முறையாகக் கூடி உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை தீர்மானங்களை எடுப்பது தொடர்பில் தீர்க்கமாக ஆராய்ந்தனர்.

அனைத்து குடிமக்களுக்கும் பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் நிலையான உணவு முறையை உறுதி செய்வதற்கான அரசாங்கத்தின் கொள்கையை வெற்றிகொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதை உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு நோக்கமாகக் கொண்டுள்ளது.

உணவுப்பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதில் துல்லியமான தரவுகளும் தகவல்களும் மிக முக்கியமானவை என்றும், அவை இன்றி முடிவுகளை எடுக்கும் அபாயத்தை எதிர்கொள்ள அரசாங்கம் தயாரில்லை என்றும், துல்லியமான தரவு மற்றும் தகவல் முறைமையை உருவாக்குவதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதற்கும், அந்தப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டது.

நெல்கொள்வனவு குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டதோடு நெல் கொள்வனவு செய்வதற்கு ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்வசதிகளின்கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லின் அளவைக் கண்காணிக்க வேண்டியதன் அவசியம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

சலுகை விலையில் நுகர்வோருக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்காக கூட்டுறவு மற்றும் சதோச வலையமைப்பை விரிவுபடுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. விலைக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் நுகர்வோருக்கு உகந்த சந்தையை உருவாக்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், நாட்டு மக்களின் உணவு நுகர்வு தொடர்பில் ஆய்வு செய்து, ஆரோக்கியமான மக்களை உருவாக்கவும், உணவு விரயத்தைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு குழு உறுப்பினர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

அதன்படி, தேசிய உணவுப் பாதுகாப்புக் கொள்கை கட்டமைப்பை நிறுவுதல், அத்தியாவசிய உணவுத் தகவல் கட்டமைப்பைப் பராமரித்தல், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோலகளின் அடிப்படையில் புதிய திட்டத்தை உருவாக்குதல், விஞ்ஞானபூர்வமான சான்றுகளின் அடிப்படையில் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரித்து விநியோகிப்பதற்கான திட்டத்தை உருவாக்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

பிரதமரின் செயலாளர் ஜி.பி.சபுதந்திரி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ஜனக பண்டார உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட உணவுக் கொள்கை மற்றும் உணவு பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ஐ)

## யோஷித மீது மீண்டுமொரு வழக்கு தாக்கல்



கொழும்பு , பெப். 11

சட்டவிரோத பண மோசடி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோஷித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டியான டெய்சி ஃபோரஸ்ட் ஆகிய இருவருக்கும் எதிராக பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்ட விசாரணையின்படி, யோஷிதவினால் பணம் எவ்வாறு பெறப்பட்டது என்பது குறித்து நியாயமான விளக்கத்தை வழங்க முடியாத காரணத்தினால், பொலிஸாரால் பணமோசடி சட்டத்தின் கீழ் குறித்த இருவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய விசாரணையின்படி, டெய்சி ஃபோரஸ்ட்டுடன் கூட்டுக் கணக்காக நிலையான வைப்புத் தொகை மற்றும் வங்கி வைப்புத்தொகைகளில் பணம் பராமரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அதன்படி, டெய்சி ஃபோரஸ்ட்டை இதற்காக சந்தேக நபராக பெயரிடுமாறு சட்டமா அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, இன்று கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் யோஷித ராஜபக்ச மற்றும் டெய்சி ஃபோரஸ்ட்டை சந்தேக நபர்களாக பொலிஸார் பெயரிட்டு, பணமோசடி சட்டத்தின் கீழ் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், புத்திக மனதுங்க கூறுகையில், "அந்தப் டெய்சி ஃபோரஸ்டடுக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைத்து சந்தேக நபர்களுக்கு எதிராகவும், நீதிமன்றத்தின் மூலம் வழக்குத் தொடரப்படும்" என தெரிவித்துள்ளார். (ஐ)

## சட்டமா அதிபர் மீதான விசாரணை



கொழும்பு , பெப். 11

சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை கேள்விக்குள்ளாக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது என்றும், ஜனாதிபதி எந்த சட்டத்திற்கு அமைவாக சட்டமா அதிபரை விசாரித்தார் எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை கேள்வி கேட்கும் சட்ட புலமை ஜனாதிபதிக்கு உள்ளதா எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் வழக்கு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

லசந்த விக்கிரமதுங்கவின் வழக்கில் சந்தேக நபர்களாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த மூவரை வழக்கில் இருந்து விடுவிக்க சட்டமா அதிபர் எடுத்த தீர்மானம் தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி, சட்டமா அதிபரை அழைத்து கடுமையாக பேசியதாகவும், பொறுப்பை நிறைவேற்ற முடியாவிடின் பதவியில் இருந்து பயனில்லை என்று குறிப்பிட்டதாகவும் அரசாங்கத்துக்கு இணக்கமான ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டன.

சட்டமா அதிபர் பிரதம நீதியரசருக்கு அடுத்த படியான பதவி நிலையில் உள்ளவர். ஆகவே சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை நாட்டு மக்கள் உட்பட எவரும் உயர்நீதிமன்றத்தின் ஊடாகவே சவாலுக்குட்படுத்த முடியும். சட்டமா அதிபரின் ஆலோசனைகள் மற்றும் நிலைப்பாட்டை உயர்நீதிமன்றத்தில் மாத்திரமே சவாலுக்குட்படுத்த முடியும்.

லசந்த விக்கிரமதுங்கவின் வழக்கு விவகாரத்தில் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு முன்பாக ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

சட்டமா அதிபரும் மனிதரே. இவ்வாறான அசாதாரன செயற்பாடுகளினால் அவர் அச்சமடைந்தால் சட்டத்தின் ஆட்சி மலினப்படுத்தப்படும்" என்றார். (ஐ)

## வாகனங்களை இறக்குமதி செய்ய தயங்கும் இறக்குமதியாளர்கள்!



கொழும்பு , பெப். 11

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதியாளர்கள் தயக்கம்காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட போதிலும், பெருமளவில் வாகனங்களை இறக்குமதி செய்வதில் இறக்குமதியாளர்கள் ஆர்வம் காட்டவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

வாகன இறக்குமதிகளின்போதான கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் வாகனங்களுக்கான வரி விதிப்பு போன்ற காரணிகளினால் இவ்வாறு இறக்குமதியாளர்கள் தயக்கம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கொள்வனவாளர்களை தேடிக்கொள்வதில் நிலவும் சிரமங்களினால் வாகன இறக்குமதி மந்த கதியில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனம் தேவைப்படுவோர் முன்பதிவு செய்வதன் அடிப்படையில் தற்பொழுது வாகன இறக்குமதியாளர்கள் வாகனங்களை வரையறுக்கப்பட்ட அடிப்படையில் இறக்குமதி செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இறக்குமதியாளர்கள் ஊடாக வாகனம் கொள்வனவு செய்யப்படும் போது கொள்வனவு செய்வோர் மீது மேலதிக வரி விதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் வாகனங்களின் விலைகள் அதிகரிப்பதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் பெரிய வாகன இறக்குமதி நிறுவனங்கள் கூட முன்பதிவு அடிப்படையில் மட்டும் வாகனங்களை இறக்குமதி செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தகவல்

கொழும்பு , பெப். 11

2024/25 பெரும்போக பயிர் செய்கையின் போது நவம்பர் 26 ஆம் திகதி முதல் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்கும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, பொலன்னறுவை மாவட்டத்தில் 6,239 விவசாயிகளுக்கு 9067.40 ஏக்கருக்காக 114 மில்லியன் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் சபை தெரிவித்துள்ளது.

2024/25 பெரும்போக பயிர் செய்கையின் போது நவம்பர் 26 ஆம் திகதி முதல் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களை ஆய்வு செய்யும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில் இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளது. இதேவேளை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலிருந்து சபையால் பெறப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட பயிர் சேத விண்ணப்பங்களுடன் தொடர்புடைய பயிர் சேத நிதியை வரவு வைக்கும் செயல்முறை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 4,324 ஏக்கர் சேதமடைந்த பயிர்களுக்காக 3,272 விவசாயிகளின் கணக்குகளுக்கு 70 மில்லியன் ரூபாய் வரவு வைக்கப்பட்டுள்ளதாக சபை தெரிவித்துள்ளது.

அதேபோல், அம்பாறை மாவட்டத்திலிருந்து பெறப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட பயிர்நிலங்களில் 7,657 ஏக்கருக்காக 8,705 விவசாயிகளின் கணக்குகளில் இன்று 122 மில்லியன் ரூபாய் வரவு வைக்கப்படவுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் பெய்த கனமழையால் நெல், பச்சை மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான பயிர் சேத இழப்பீட்டுத் தொகையை மதிப்பிடும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முகாம்களில் வாழும் குடும்பங்களுக்கு புதிய வீடுகள்

கொழும்பு , பெப். 11

மலையக பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவுகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் குடும்பங்களுக்கு விரைவாக வீடுகள் வழங்கப்படும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கென வீடுகளை நிர்மாணிககும் பணிகள், எதிர்வரும் மார்ச் முதல் வாரத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சில் திங்கட்கிழமை அமைச்சின் செயலாளர்கள் மற்றும் முப்படை அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலே அமைச்சர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுளார்.

கேகாலை மாவட்டத்தில் 22 குடும்பங்கள் மண்சரிவு காரணமாக அகதி முகாம்களில் தங்கியுள்ளன.

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்லைப்பகுதியில் 51 குடும்பங்கள் தமது பிள்ளைகளுடன் ஐந்து ஆண்டுகளாக கபரகலையில் மூடப்பட்ட தேயிலை தொழிற்சாலையில் வசித்து வருகின்றனர்.

இந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படும். இதற்கான கட்டுமானப்பணிகள் பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சின் செலவில் மேற்கொள்ளப்படும் என்றார். (ஐ)



# சிலிண்டர் வெடித்ததில் இருவருக்கு காயம்



கொழும்பு , பெப். 11

கதிர்காமம் கடற்படை விடுதியில் தங்கியிருந்த இருவர் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த எரிவாயு சிலிண்டர் செவ்வாய்கிழமை (11) காலை 8.30 மணியளவில் வெடித்தது. மாத்தறை, கெக்கனதுர பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணும் 36 வயதுடைய ஆணும் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் காயமடைந்தனர்.

காலை உணவைத் தயாரித்துக் கொண்டிருந்தபோது எரிவாயு சிலிண்டர் வெடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கதிர்காமம் பிராந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திஸ்ஸமஹாராம மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ஐ)

# மின்வெட்டு குறித்து சஜித் கருத்து



கொழும்பு , பெப். 11

மின்வெட்டுக்கு முதலில் ஒரு குரங்கு மீது பழி சுமத்திய அரசாங்கம், பின்னர் அதனை கடந்த அரசாங்கங்கள் மீது சுமத்தியதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது ஓ கணக்கில் பதிவொன்றை இட்டு இதனை தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தற்போதைய அரசாங்கம் உண்மையான பிரச்சினை என்ன என்பதை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சூரிய மின் உற்பத்தியை அதிகரிக்கத் தவறியதும், குறைந்த தேவை காலங்களை நிர்வகிக்காத பலவீனமான நிர்வாகமும் மின் தடைக்கு முக்கிய காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# புதிய செயலணி ஸ்தாபிக்கப்பட்டது



*கொழும்பு , பெப். 11*

*நிதி தூய்தாக்கல், பயங்கரவாதத்திற்கான நிதி பங்களிப்பை தடுப்பதற்கான செயலணிஸ்தாபிக்கப்பட்டுள்ளது.*

*ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் புவனேக அலுவிகார தலைமையில் இந்த செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.*

*இந்த செயலணியின் ஏனைய உறுப்பினர்களாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார, தொழில் மற்றும் பொருளாதார பிரதியமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி திட்டமிடல் பிரதியமைச்சர் ஹர்சன சூரியப்பெரும உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*அத்துடன், இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் நெலுமினி தவுலகல, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஏ.கே.டி.டி.டி. அரந்தரவும் செயலணியில் அங்கம் வகிக்கின்றனர்.*

# தையிட்டி தொடர்பில் மக்களோடு கலந்துரையாடி தீர்வு காண்போம்



கொழும்பு , பெப். 11

யாழ். தையிட்டி விகாரையின் காணி தொடர்பில் யாழ்ப்பாண மக்களின் விருப்பத்தை முதலில் கவனத்திற் கொள்ள வேண்டுமென கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தையிட்டி விகாரைக் காணி தொடர்பில் காணி உரிமையாளர்கள் செவ்வாய்க்கிழமை (11) ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிட்டபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது குறித்து தெரிவித்துள்ள அமைச்சர்,

தையிட்டியில் விகாரை கட்டி முடிக்கப்பட்டு மத வழிபாடுகளும் இடம் பெற்று வருகின்றன. இதைக் கட்டும் போது எதுவும் பேசாதவர்கள், இதைப் பற்றி இன்று பேசுவது புரியாத புதிராகவுள்ளது. எதிர்வரும் காலங்களில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் பேசுவதற்கு இவர்களுக்கு எதுவும் இல்லை. இதனால்தான், இவ்விடயத்தைத் தூக்கிப் பிடித்துள்ளனர்.

இனவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில் சிலர், மீண்டும் அரசியலுக்காகப் பேச முன் வந்துள்ளனர்.

இந்த விகாரை கட்டி முடிக்கப்படும் வரைக்கும் இங்கிருந்தோர் எதையும் பேசவில்லை.

மக்களின் விருப்பத்தையறிந்து அன்றிருந்தவர்கள் செயற்படாதது ஏன்?

இப்பிரச்சினைக்கு மக்களோடு கலந்துரையாடி தீர்வு காண்போம்.

விகாரை கட்டப்பட்டுள்ள இடம் மக்களுடையது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இவர்களுக்கு நட்டஈடு அல்லது காணிகளை வழங்க வேண்டிய தேவை உள்ளது.

விகாரையை உடைத்து நொறுக்கி விட முடியுமா? என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

உடைத்து நொறுக்குவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு வருமா?

இது பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எவ்வாறாயினும், இதற்கு சுமுகமான தீர்வை காண்பது அவசியம்.

அரசியல் ரீதியாகத் தோல்வியுற்றோர் ஐக்கியப்பட்டுள்ள மக்களைப் பிரிக்கப் பார்க்கின்றனர். எவராலும் மக்களைப் பிரிக்க இயலாது என்றும் கூறியுள்ளார். (ஐ)

# கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம்




கொழும்பு , பெப். 11

கொழும்பு - 02, /ஹுணுபிட்டிய - கங்காராம விகாரையின் வருடாந்த நவம் மஹா பெரஹெர காரணமாக விசேட போக்குவரத்து திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விகாரையின் வருடாந்த நவம் மகா பெரஹெர செவ்வாய்க்கிழமை (11) மற்றும் நாளை புதன்கிழமை (12) இரவு 7.30 மணி முதல் 10.30 மணி வரை வீதி உலா வர உள்ள நிலையில் இந்த விசேட போக்குவரத்து திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

விகாரையில் பெரஹெர ஆரம்பமாகி ஜினரத்தன மாவத்தை வழியாகச் சென்று, ஹுணுபிட்டிய வெவ வீதிக்கு திரும்பி, ராமநாயக்க மாவத்தை சந்திக்கு வந்து, ராமநாயக்க மாவத்தை வழியாக ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை சந்தி வரை பயணித்து, ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை ஊடாக அல்ட்ரயார் அவென்யூ சந்திப்பில் வலதுபுறம் திரும்பி, அல்ட்ரயார் அவென்யூ வழியாக ஸ்டேபிள் தெரு சந்தி வரை பயணித்து, வலதுபுறம் திரும்பி ஸ்டேபிள் தெரு, பேப்ரூக் பிளேஸ், பேப்ரூக் சுற்றுவட்டம், ஜினரத்தன மாவத்தை வழியாக கங்காராம விகாரையை வந்தடையவுள்ளது.

இதன் காரணமாக குறித்த காலப்பகுதியில் மேற்படி வீதிகளை பயன்படுத்தும் சாரதிகள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ஐ)

# பஞ்சாப் முதல் மந்திரியாக திட்டம்: லூதியானாவில் கெஜ்ரிவால் போட்டி?



தலைநகர் டெல்லியில் சமீபத்தில் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி தோல்வி அடைந்து ஆட்சியை பறிகொடுத்தது.

இதற்கிடையே, பஞ்சாப் அமைச்சரவைக் கூட்டம் வரும் 13-ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்துக்கு முன் கட்சித்தாவல் வதந்தி பரவி வரும் நிலையில், ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் முதல் மந்திரி பகவந்த் மான் மற்றும் கட்சி எம்.எல்.ஏ.க்களை தலைநகர் டெல்லிக்கு அழைத்துள்ளார்.

கட்சியின் உயர்மட்டத்தலைமையின் கவனம் தற்போது அதன் கட்டுப்பாட்டில் உள்ள ஒரே மாநிலமான பஞ்சாபின் மீது திரும்பியுள்ளது.

இந்நிலையில், டெல்லியில் பஞ்சாப் முதல் மந்திரி பகவந்த் மான் மற்றும் எம்.எல்.ஏ.க்களுடன் ஆம் ஆத்மி கட்சி தலைவர் கெஜ்ரிவால் இன்று ஆலோசனை நடத்தினார்.

அப்போது, பஞ்சாப் முதல் மந்திரியாகும் வகையில் அங்கு காலியாக உள்ள லூதியானா சட்டசபை தொகுதியில் கெஜ்ரிவால் போட்டியிட இருப்பதாக தகவல் வெளியானது. இதுகுறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

ஆபரேஷன் தாமரை திட்டத்தின் ஒரு பகுதியாக தனது எம்.எல்.ஏ.க்களை வேட்டையாட பா.ஜ.க. முயற்சித்து வருகிறது என ஆம் ஆத்மி ஏற்கனவே குற்றம்சாட்டியிருந்தது.

எனவே, டெல்லி போல் பஞ்சாப்பிலும் இதுபோன்ற வீழ்ச்சி ஏற்படாமல் இருக்கவே இந்த நடவடிக்கையை ஆம் ஆத்மி எடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இரண்டு வருடங்களுக்கு பிறகு உயர்ந்தது ரூபாய் மதிப்பு!



அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாய் மதிப்பு இன்று சற்றே உயர்வை கண்டுள்ளது.

நேற்று வாரத்தின் முதல் நாளில் 43 சதவீதம் வீழ்ச்சி அடைந்து டொலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 87.92 ரூபாயாக இருந்தது.

இந்திய ரூபாய் இதுவரை இவ்வளவு வீழ்ச்சியை சந்திதது கிடையாது. எனவே ரூபாயின் மதிப்பை உயர்த்துவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியும் நேற்று முயற்சித்தது.

சந்தை திறப்பதற்கு முன்பு, இந்திய ரிசர்வ் வங்கி, அரசு நடத்தும் வங்கிகள் வழியாக டொலர்களை விற்றது. சந்தை திறந்த பிறகும் இது நீடித்ததாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். சுமார் 2 முதல் 3 பில்லியன் டாலர்களை ரிசர்வ் வங்கி விற்பனை செய்தது.

எனவே இன்று டொலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு உயர்ந்துள்ளது. நேற்றைவிட விட 61 சதம் குறைந்து இன்றைய ரூபாய் மதிப்பு 86.63 ஆகி உயர்ந்துள்ளது. கடந்த 2 வருடத்தில் இல்லாத அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. கடைசியாக நவம்பர் 2022 க்கு பிறகு ரூபாய் மதிப்பு 1 சதவீத வளர்ச்சியை கண்டுள்ளது.



# பிரதமர் மோடி தைப்பூசம் வாழ்த்து!

தைப்பூச தினத்தை முன்னிட்டு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்து உள்ளார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

அனைவருக்கும் மகிழ்ச்சியான தைப்பூச தின வாழ்த்துகள். முருகனின் தெய்வீக அருள் நம்மை வலிமை, செழிப்பு மற்றும் ஞானத்துடன் வழிநடத்தட்டும். இந்த புனிதமான நாளில், அனைவருக்கும் மகிழ்ச்சி, நல்ல ஆரோக்கியம்,வெற்றிக்காக நான் பிரார்த்திக்கிறேன்.

இந்த நாள் நம் வாழ்வில் அமைதியையும் நேர்மறையையும் கொண்டு வரட்டும். வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா என்று தெரிவித்துள்ளார்.

# டெல்லியில் அமித்ஷாவுடன் உமர் அப்துல்லா திடீர் சந்திப்பு!




ஜம்மு காஷ்மீர் முதல்-மந்திரியும், தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவருமான உமர் அப்துல்லா தலைநகர் டெல்லியில் மத்திய உள்துறை மந்திரி அமித் ஷாவை சந்தித்து உரையாடியுள்ளனர்.

சுமார் 30 நிமிடங்கள் நடந்த சந்திப்பின் போது, ஜம்மு காஷ்மீரின் நிலைமை குறித்து முதல்-மந்திரி உமர் அப்துல்லா அமித் ஷாவுக்கு தெரிவித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் ஜம்மு காஷ்மீரின் கதுவாவில் தற கொலை செய்துகொண்டு ஒருவர் மரணித்தது, வடக்கு காஷ்மீரின் சோப்பூரில் உள்ள சோதனைச் சாவடியில் நிற்காததால் லாரி ஓட்டுநர் சுட்டுக் கொல்லப்பட்டது ஆகிய சம்பவங்களைத் தொடர்ந்து ஜம்மு-காஷ்மீரின் நிலைமை குறித்து உமர் அப்துல்லா அமித் ஷாஷாவுக்கு விளக்கமளித்ததாக டெல்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்றும் உமர் அப்துல்லா, அமித் ஷாவை வலியுறுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், காவல்துறை, பொது ஒழுங்கு, அகில இந்திய சேவைகள் மற்றும் இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான விஷயங்களில் துணைநிலை ஆளுநருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மாற்றுவது தொடர்பாகவும் கோரிக்கை வைத்ததாக கூறப்படுகிறது.



# உலகை ஆட்டிப்படைக்கும் உடல் எடை அதிகரிப்பு!

உடல் பருமனுக்கு முதன்மைக் காரணமாக உடல் இயக்கமின்மை, துரித உணவுகளை அதிகமாக உட்கொள்வது, உடற்பயிற்சி செய்யாமை, அதிகப்படியான மது அருந்துதல், சர்க்கரை மிகுந்த பானங்கள் அருந்துதல் ஆகியவற்றின் மூலம் உடலில் கொழுப்பு படியத் தொடங்கி உடல் எடை கூடுவதாக மருத்துவம் சொல்கிறது.

ஆனால், மேல்குறிப்பிட்ட எந்தப் பழக்கங்களும் இல்லாமல், அதிகம் சாப்பிடாமல் குண்டாக இருக்கும் நண்பர்களை நிச்சயம் உங்கள் பள்ளி, கல்லூரி காலம் கொண்டிருக்கும். இதனால்தான் குண்டாக இருப்பதை வெறுக்கும் எண்ணம், பள்ளிக்கூட மாணவியரிடம் காணப்படுகிறது. குண்டாக இருக்கும் மாணவியர், சக மாணவர்களின் கேலி கிண்டல்களுக்குப் பயந்துகொண்டே பெரும்பாலும் பள்ளிக்கூடம் வருவதைத் தவிர்க்க விரும்புவதாக ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

சில பெற்றோர் குண்டாக இருக்கும் பெண் குழந்தைக்குத் தேவையான அளவு உணவைக் கொடுக்காமல், குறைவாகக் கொடுப்பார்கள். ஆனால், எங்கே அதிகம் சாப்பிட்டால் இன்னும் குண்டாகி விடுவோமோ என நினைத்து அதையும் சரியாகச் சாப்பிடாமல், பாதிச் சாப்பாட்டை என் தட்டில் கொட்டிய பள்ளித் தோழியை இப்போது என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

இது ஒருபுறமென்றால், “என்னதான் சாப்பிட்டாலும் ஒல்லியாகவே இருக்கிறேன். உடல் பெருக்க மாட்டேடன்கிறது” எனச் சிலர் குறைபட்டுக்கொள்வார்கள். காரணம், ‘ஒல்லிக்குச்சி’ என்கிற பட்டப்பெயருக்குப் பயந்துதான். ”இந்தப் பொண்ணு ஏன் இவ்ளோ ஒலலியா இருக்கு? வீட்ல சாப்பாடே போடுறதில்லயா?” எனக் கேலியும் கிண்டலுமாக நாமுமே ஒரு காலத்தில் பேசியிருப்போம்.

“நல்லி எலும்பு என்று நினைத்து நாய் தூக்கிக்கொண்டு போய்விடப் போகிறது” என்று விவேக் பேசும் நகைச்சுவை உட்பட மனோபாலா உள்ளிட்ட ஒல்லியான பலரை நகைச்சுவைக் காட்சிகளில் தமிழ் சினிமா பயன்படுத்தியதுண்டு.

மருத்துவரீதியாகப் பார்த்தால், அதிகம் சாப்பிடாமல் இருப்பவர்கள் குண்டாக இருப்பதற்கும், அதிகம் சாப்பிடுபவர்கள் ஒல்லியாக இருப்பதற்கும் நிறையவே வாய்ப்புள்ளது. சிலருக்குப் பெற்றோரின் மரபணு (டி.என்.ஏ) சார்ந்த உடலமைப்பும், சிலருக்கு வியாதிகளுமேகூடத் தலைமுறை கடந்து தொடரும்.

இதனால்தான் அப்பாவை போலவே உடல் பருமனுடன் இருக்கும் மகன்களை நாம் பார்க்க முடிகிறது. அது போலத்தான் பெண்களும்.

அதையும் தாண்டி சிலருக்கு ஙநிசநளளஷைெ என்று சொல்லக்கூடிய மன அழுத்தத்தின் மூலமும் உடல் எடை கூட வாய்ப்புள்ளதாக மருத்துவ அறிவியல் சொல்கிறது. சிலருக்குக் கொஞ்சம் உடல் கூடினால்கூட அதைப் பார்த்துக் கவலை கொள்வதன் மூலம், இன்னமும் உடல் எடை கூடிவிடுவதற்கு வாய்ப்பாகி விடுகிறது.

குறிப்பாக இரவு அதிக நேரம் கண் விழித்து வேலை செய்பவர்களுக்கு உடலின் ஹோர்மோன்களில் ஏற்படும் மாற்றங்கள் பெரிய பிரச்சனைகளைப் பின்னாளில் கொண்டுவரும் என்பதை எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள். தைராய்டு நோய் காரணமாகவும் ஹோர்மோன் அளவுகளில் சீரற்ற நிலை தோன்றுவதாலும் உடல் எடை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

என்னதான் காரணங்கள் பல அடுக்கினாலும், குண்டான பெண்கள் திருமணச் சந்தையில் என்றைக்குமே புறக்கணிப்படுகிறார்கள்.

செப்ரெம்பர் 2015 ஆம் ஆண்டு, இந்திய அரசின் ‘ஏர் இந்தியா’ விமான சேவை நிறுவனம் 125 விமானப் பணிப்பெண்களையும், உடன் பணியாற்றும் சிலரையும் அதிக உடல்பருமன் காரணமாக அப்பணிகளிலிருந்து நீக்கப்போவதாக அறிவித்தது. உடல் எடையைக் குறைத்துக்கொள்ளுமாறு 600 பணியாளர்களை ஏற்கெனவே எச்சரித்தும், அவர்களில் 125 பேர் கேட்கப்பட்ட அளவுக்கு எடையைக் குறைக்கவில்லை என ‘பிசினஸ் டுடே’ இதழில் அதிகாரியொருவர் குறிப்பிட்டிருக்கிறார்.



காரணம் கேட்டால், உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ளாத விமானப் பணியாளர்களால் அவசர நிலைமைகளின்போது வேகமாக இயங்க முடியாமல் போகலாம் எனக் கணிக்கிறார்களாம்.

ஒரு பெண்ணை அவள் உடல் சார்ந்து விமர்சிப்பதோ, திருமணத்தில் நிராகரிப்பதோ தவறு என்பதை மட்டும் புரிந்துகொள்ள வேண்டிய புரிதலை உண்டாக்க வேண்டியுள்ளது. ஏனெனில், சிறுவயதிலிருந்தே உடல் பருமனாக இருப்பவர்களைக் கேலியும் கிண்டலும் செய்வதைப் பார்த்து வளரும் ஒரு தலைமுறையும் வளர்ந்த பிற்பாடு அதையேதான் தொடரும்.

எனவே அடுத்த தலைமுறைக்கு இனி வரப் போகும் உடல் சார்ந்த பிரச்சனைகளை எடுத்துரைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இல்லையேல் Fling, cuffing, Situationship, Delaytionship, காதல், திருமணம் போன்ற உறவுகளில் நிச்சயம் உளவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பெரும் பிளவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.



அதைவிட, குண்டாக இருப்பது அசிங்கம் என் கிற மனநிலை மக்களிடத்தில் இருக்கும் வரைதான் அதைச் சார்ந்த வணிகமும் மருத்துவமும் சுழலும். தற்போது வரை, உடல் எடை குறைப்பதற்கு மட்டும் மருந்துகள், அறுவை சிகிச்சை, உடற்பயிற்சிக்கூடங்கள், சொற்ப நாட்களில் உடல் எடையைக் குறைக்க தன்னிடம் சிகிச்சை முறை இருப்பதாகச் சொல்லும் போலி மருத்துவர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான கோடிகளில் புரளும் ஒரு பெரும் வணிகம் இதைச் சார்ந்து மட்டுமே நிகழ்ந்துகொண்டிருக்கிறது. நாம் விழித்துக்கொள்ளும் வரை இவர்கள் கல்லாவில் பணம் குவிந்துகொண்டேதான் இருக்கும்.

உடல் எடை கூடுவது என்பது ஒரே இரவில் நிகழாத போது, மாயாஜாலம் போல ஒரே நாளில் உடல் எடையைக் குறைப்பது மட்டும் எப்படிச் சாத்தியமாகும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ரஜினி சொல்வது போல, “உடனடியாக எதுவும் கிடைக்காது. அப்படிக் கிடைத்தால் அது நிலைக்காது.”

ஒல்லியாக இருக்கிறோமா, குண்டாக இருக்கிறோமா என்பதைவிட நாம் நல்ல உடல்நலத்துடனும், நல்ல மனநலத்துடனும் ஆரோக்கியமாக இருக்கிறோமா என்பதுதான் அனைத்திற்கும் முதன்மையானது. ஏதோ ஒரு பெயரில் தொடர்ந்து உங்களை எடை போட்டுக்கொண்டே இருக்கும் இந்த சமூகத்திற்கு நீங்கள் எதையும் நிரூபிக்கத் தேவையில்லை.



# ஜெட் விமானங்கள் மோதிய விபத்து - ஒருவர் உயிரிழப்பு!

அமெரிக்காவின் அரிசோனாவில் உள்ள ஸ்காட்ஸ்டேல் விமான நிலையத்தில் தனியார் ஜெட் விமானங்கள் மோதியதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் காயமடைந்தனர்.

ஸ்காட்ஸ்டேல் விமான நிலையத்தின் விமான திட்டமிடல் மற்றும் அவுட்ரீச் ஒருங்கிணைப்பாளர் கெல்லி குஸ்டர் கூறும் போது, "நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு தனியார் வணிக ஜெட் விமானத்தின் மீது மற்றொரு வணிக ஜெட் விமானம் மோதியது. டெக்சாஸின் ஆஸ்டினில் இருந்து வந்த வந்த ஜெட் விமானத்தின் தரையிறங்கும் கியர் செயலிழந்ததாகத் தெரிகிறது. இதன் காரணமாகவே மோதல் ஏற்பட்டது," என்று அவர் கூறினார்.

காயமடைந்தவர்களில் இருவர் அவசர சிகிச்சை பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஒருவர் மருத்துவமனையில் உள்ளார் என்று ஸ்காட்ஸ்டேல் தீயணைப்புத் துறையை சேர்ந்த டேவ் ஃபோலியோ தெரிவித்தார்.

விபத்தைத் தொடர்ந்து மோதலில் உயிரிழந்த நபரின் உடலை மீட்கும் பணிகள் நடைபெற்று வருவதுடன் ஓடுபாதை மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# எல்லாம் கைமீறி போகும் ஹமாஸ் கெடு விதித்த டிரம்ப்!



இஸ்ரேலிய பிணைக்கைதிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும் என ஹமாஸ்க்கு டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் இடையேயான போர் 15 மாதங்களுக்குப் பிறகு போர் நிறுத்த ஒப்பந்தம் மூலம் கடந்த ஜனவரி 19 இல் முடிவுக்கு வந்தது. இதில் இஸ்ரேல் தரப்பில் சுமார் 1,700 பேரும், பாலஸ்தீன தரப்பில் சுமார் 47,000 பேரும் கொல்லப்பட்டனர்.

போர் நிறுத்த ஒப்பந்தப்படி ஹமாஸ் அமைப்பினர் தங்களிடம் உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவித்து வரு கின்றனர். அதற்கு ஈடாக பாலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்து வருகிறது.


இந் நிலையில் இஸ்ரேலிய பிணைக்கைதிகளை வரும் சனிக்கிழமைக்குள் விடுவிக்கவில்லை என்றால் பின்விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் எச்சரித்துள்ளார்.

ஏற்க்கனவே காசாவை அமெரிக்காவுக்கு சொந்தமாக்குவேன் என்று டிரம்ப் கூறியிருந்தார். காசா அமெரிக்கா கட்டுப்பாட்டில் வந்த பிறகு அங்கிருக்கும் 20 லட்சத்துக்கும் அதிகமான பாலஸ்தீனியர்களுக்குத் காசாவுக்குள் திரும்பிச் செல்லும் உரிமை இல்லை என்றும் டிரம்ப் பரபரப்பை கிளப்பினார். எதிர்காலத்திற்கான சிறந்த ரியல் எஸ்டேட் தளம் என்று காசாவை அவர் வர்ணித்தார்.

சனிகிழமைக்குள் அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்றால் போர்நிறுத்தத்தை இரத்து செய்ய நேரிடும் என்று தெரிவித்தார். இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டது என்றும் அதனால் அடுத்த கட்ட பயண கைதிகள் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாகவும் ஹமாஸ் அறிவித்ததை அடுத்து டிரம்ப் இவ்வாறு கூறியுள்ளார்.

டிரம்ப் பேசியதாவது, என்னைப் பொறுத்தவரை, சனிக்கிழமை மதியம் 12 மணிக்குள் அனைத்து பணயக்கைதிகளும் திருப்பி அனுப்பப்படாவிட்டால் போர் நிறுத்தத்தை இரத்து செய்யச் சொல்வேன். சிறிது சிறிதாக அல்ல, இரண்டு, மூன்று என்று அல்ல, மொத்தமாக அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். இல்லையெனில் எல்லாம் கைமீறி போகும். நான் என்ன சொல்கிறேன் என்பதை ஹமாஸ் பிறகு தெரிந்துகொள்ளும் என்று கூறினார்.

அமெரிக்கா காசாவை கையகப்படுத்தும் திட்டத்தின் கீழ் பாலஸ்தீனியர்களை ஏற்றுக்கொள்ள மறுத்தால், நட்பு நாடுகளான ஜோர்டான் மற்றும் எகிப்துக்கு பில்லியன் கணக்கான டாலர் அமெரிக்க நிதியுதவியை நிறுத்துவதாகவும் டிரம்ப் அச்சறுத்தியுள்ளார்.




# ரூ. 22 லட்சத்திற்கு ஏலம் போன குப்பையில் கிடந்த ஹாரி பாட்டர் புத்தகம்!

1997ஆம் ஆண்டு ஜே.கே.ரவுலிங் எழுதிய 'ஹாரி பாட்டர் அண்ட் தி ஃபிலாசஃபர்ஸ் ஸ்டோன்' புத்தகம் வெளியானது. இந்த புத்தகம் உலகம் முழுவதும் பெரும் வரவேற்பை பெற்றதையடுத்து தொடர்ந்து அடுத்தடுத்த பாகங்களை எழுதினார் ரவுலிங். இதனையடுத்து ஹாரி பாட்டர் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு திரைப்படங்களும் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றன.

இந்த நிலையில், குப்பையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஹாரி பாட்டர் நாவலின் முதல் பதிப்பு புத்தகம் சுமார் ரூ.22 லட்சத்திற்கு ஏலம் போய் உள்ளது. ஆன்லைன் மூலம் கடந்த சனிக்கிழமை ஏலம் நடைபெற்று உள்ளது.

ஏலம் நடத்தும் டேனியல் பியர்ஸ் என்பவர், உயிரிழந்த ஒருவரின் உடைமைகளுடன் இப்புத்தகத்தைக் கண்டெடுத்துள்ளார்.

500 புத்தகங்களே அச்சிடப்பட்டது என்றும் பொது நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட 300 பிரதிகளில் ஒன்று இது என்றும் கூறப்படுகிறது.

# பாலஸ்தீனர்களை காசாவில் இருந்து வெளியேற்றுவோம் டிரம்ப் கருத்துக்கு அமெரிக்க செனட்டர் எதிர்ப்பு!



இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் இடையேயான போர் 15 மாதங்களுக்குப் பிறகு போர் நிறுத்த ஒப்பந்தம் மூலம் முடிவுக்கு வந்தது. இதில் இஸ்ரேல் தரப்பில் சுமார் 1,700 பேரும், பாலஸ்தீன தரப்பில் சுமார் 47,000 பேரும் கொல்லப்பட்டனர்.

போர் நிறுத்த ஒப்பந்தப்படி ஹமாஸ் அமைப்பினர் தங்களிடம் உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவித்து வருகின்றனர். அதற்கு ஈடாக பாலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்து வருகிறது.

இந் நிலையில் காசாவை அமெரிக்கா வாங்க உள்ளதாக டிரம்ப் தெரித்த கருத்து பெரும் பரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக டிரம்ப் கூறுகையில் , "காசாவை வாங்குவதற்கும் சொந்தமாக்குவதற்கும் நான் உறுதிபூண்டுள்ளேன். அதை ஒரு ரியல் எஸ்டேட் தளம் என்று எண்ணிக்கொள்ளுங்கள். எனவே அதை மாற்றியமைக்க வேண்டும். ஹமாஸ் மீண்டும் தலைதூக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் .

காசா மக்கள் காசாவுக்குத் திரும்ப விரும்பவில்லை. அவர்கள் காசாவுக்குத் திரும்புவதற்கு ஒரே காரணம் அவர்களிடம் மாற்று வழி இல்லை என்பதுதான். அவர்களுக்கு பாதுகாப்பான பகுதியில் ஒரு வீட்டைக் கொடுக்க முடிந்தால் அவர்கள் திரும்ப விரும்பமாட்டார்கள்" என்று டிரம்ப் தெரிவித்தார். இந்நிலையில், காசாவை ரியல் எஸ்டேட் தளம் ஆக்குவோம் என்று டிரம்ப் அமெரிக்க செனட்டர் பெர்னி சாண்டர்ஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பதிவில், "47000-த்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு இலட்சம் பாலஸ்தீன மக்கள் காயமடைந்துள்ளனர். வலுக்கட்டாயமாக பாலஸ்தீன மக்களை வெளியேற்றி காசாவை ரியல் எஸ்டேட் தளமாக உருவாக்குவோம் என்று டிரம்ப் பேசுகிறார். போரினால் பாதிக்கப்பட்ட காசா பகுதியானது பாலஸ்தீன மக்களுக்காக மீண்டும் கட்டப்பட வேண்டும் மாறாக 'கோடீஸ்வர சுற்றுலாப் பயணிகளுக்காக' அல்ல" என்று தெரிவித்துள்ளார்.

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, சாந்தசாலேை பகுதியைச் சேர்ந்த பசுப்பையா ஆனந்தன் (வயது 40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேற்படி நபர் மாடியில் இருந்து கீழே வீழ்ந்து மரணமடைந்திருக்கலாம் என்று பாலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனினும், இது காலையா அல்லது விபத்தா எனத் தடவியல் பாலிஸாரின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வெள்ளியன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேடமாக நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று நாடாளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலி தலைமையில் நேற்றுக் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 16 இன் ஏற்பாடுகளுக்கு அமைய பிரதமரினால் சபாநாயகரிடம் விடுக்கப்படும் கோரிக்கைக்கு அமைய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது. அத்துடன், எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்தச் சட்டமூலத்தை ஆராய்வதற்காகச் சம்பந்தப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழுவைக் கூட்டுவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்களை விரைவில் நடத்துமாறு உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் பின்னணியில், இதற்கு மதிப்பளிக்கும் வகையில் தேர்தலை மேலும் காலதாமதப்படுத்தாது நடத்துவதன் அவசியத்தை சபை முதல்வர், அமைச்சர் பிமல் ரத்னாயக்க இங்கு சுட்டிக்காட்டினார்.

இதன்படி, உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது என்று நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

குறித்த சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் திருத்தங்களை முன்வைப்பதாயின் அவற்றை எதிர்வரும் 17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் வழங்குவதற்கும் இங்கு இணங்கப்பட்டது.

அதேநேரம், நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியால் 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு - செலவுத் திட்ட உரை) முன்னர் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு முன்வைக்கப்படும் என்றும் பதில் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் எதிர்வரும் நாட்களில் மின்வெட்டை அமுல்படுத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது

இதேவேளை இன்று மின்வெட்டு அமுல்படுத்தப்படும் நேரங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தேவையேற்படின் மின்சார விநியோகத் தடை அமல்படுத்தப்படும் நேரம் 30 நிமிடங்களால் மாறுப டலாம் என்றும் இலங்கை மின்சார சபை குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி R, S, T, W ஆகிய வலயங்களில் பிற்பகல் 3.30 முதல் 4 மணிக்குள் மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு 5 மணி முதல் 5.30 வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

A, B, C, D, P, Q ஆகிய வலயங்களில் மாலை 5 மணி முதல் 5.30க்குள் மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு மாலை 6.30 முதல் 7 மணி வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

E, F, G, H, U, V ஆகிய வலயங்களில் மாலை 6.30 முதல் 7 மணி வரை மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு இரவு 8 மணி முதல் 8.30 வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

I, J,K, L ஆகிய வலயங்களில் இரவு 8 மணி முதல் 8.30 வரை மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு இரவு 9.30 முதல் 10 மணி வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும் என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட திடீர் மின் தடையைத் தொடர்ந்து, நுரைச்சோலை மின் நிலையத்தில் உள்ள 3 மின்மாற்றிகள் செயலிழந்ததால், மின்சார தேவையை நிர்வகிக்கும் பொருட்டு, இலங்கை மின்சார சபை நேற்றும் இன்றும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் ஒன்றரை மணி நேரம் மின் விநியோகத்தை தடை செய்ய முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களோ வாழாத இடங்களில் இலங்கை அரசும் பௌத்த பிக்குகளும் இராணுவத்தினரை முன்னிறுத்தி புதிய பௌத்த ஆலயங்களைக் கட்டத் தொடங்கினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சிங்கள பௌத்த மயமாக்குதலே அதனுடைய பாரிய நோக்கமாக இருந்தது. அந்தவகையில் வடக்கு மாகாணத்தின் பல்வேறுபட்ட இடங்களில் புத்த கோயில்கள் உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் நாவற்குழி, மன்னாரில் திருக்கேதீஸ்வரம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இத்தகைய புதிய பௌத்த ஆலயங்கள் உருவாக்கப்பட்டன.

இதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்திலும் புதிய புதிய பௌத்த ஆலயங்கள் இன்றும் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கு என்பது தமிழ் மக்களின் தாயகம் என்பதை இல்லாமல் செய்வதற்கும் இந்த சிங்கள பௌத்தமயமாக்கல் என்பது அரசுக்குத் தேவையாக இருந்தது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் பலாலி, தையிட்டியிலும் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த தமிழ் மக்களுக்கு உரித்தான காணிகளைப் பலாத்காரமாகக் கையகப்படுத்தி அங்கு ஒரு பாரிய புத்த கோயிலை நிறுவியிருக்கின்றனர்.

இந்த புத்த கோயில் கட்ட ஆரம்பிக்கின்றபோது யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுவானது தனியார் காணிகளைப் பலாத்காரமாகக் கையகப்படுத்தியது சட்டவிரோதமானது என்றும், எந்தவிதமான அனுமதிகளும் பெற்றுக்கொள்ளப்படாமல் புத்த கோயில் கட்டுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும், அந்தச் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஆரம்பத்திலேயே வலியுறுத்தியிருந்த போதிலும்கூட அது எந்தவிதத்திலும் கவனத்தில் எடுக்கப்படாமல் இப்போது அந்தப் புத்த கோயில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்போது புதிதாகப் பதவியேற்றுள்ள இடதுசாரி அரசானது சாதி, மத, இன பேதங்களற்ற சமத்துவமான இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் எனப் பேசி வருகின்றது. ஆனால், வடக்கு - கிழக்கில் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி சட்டவிரோதமாக உருவாக்கப்பட்டு வரும் பௌத்த ஆலயங்கள் தொடர்பாக இன்னும் வாய்மூடி மௌனியாகவே இந்த அரசு இருந்து வருகின்றது.

யுத்த காலத்தில் உருவாக்கப்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் இருந்த பல்வேறுபட்ட சைவ, கிறிஸ்தவ ஆலயங்கள் எந்தவிதக் கேட்டுக்கேள்வியும் இல்லாமல் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இதேபோன்று தென் பகுதியிலும்கூட பள்ளிவாசல்களும் சைவக் கோயில்களும் இடிக்கப்பட்டுள்ளன. ஆனால், இப்போது தையிட்டியில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோதமான ஒரு பௌத்த ஆலயம் எக்காரணம் கொண்டும் இடிக்கப்படமாட்டாது என்று அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான இடதுசாரி அரசும் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றது.

இது சிங்கள மக்களுக்கு ஒரு சட்டம், ஏனைய மக்களுக்கு ஒரு சட்டம் என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. சாதி, மத, மொழி, இன பேதமற்ற ஓர் இலங்கையை உருவாக்க வேண்டும் என இப்போது உள்ள புதிய அரசு உண்மையிலேயே விரும்புமாக இருந்தால், வடக்கு - கிழக்கு எங்கும் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்து பௌத்த ஆலயங்களின் கட்டுமானப் பணிகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

சிங்கள மக்களோ பௌத்தர்களோ இல்லாத இடங்களில் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த பௌத்த ஆலயங்கள் தொடர்பாக அரசு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

தன்னை ஓர் இனவாதியோ, மதவாதியோ அல்ல என்று காட்ட முயற்சிக்கும் அநுர அரசானது நடைமுறையில் இனவாதத்தையும் மதவாதத்தையும் முன்னிலைப்படுத்துவதை முழுமையாக உடனடியாகக் கைவிட வேண்டும். தையிட்டி புத்த கோயில் நிர்மாணம் என்பது ஒரு குறியீடு மட்டுமே. ஆகவே, இதற்கு எதிரான கடுமையான கண்டனத்தை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பதிவு செய்வதுடன் இதற்காக மக்கள் முன்னெடுக்கும் அனைத்து போராட்டங்களுக்கும் ஆதரவளிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அநுர அரசு மாற்றத்தை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கையில் அந்தக் கட்சியில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் சிலரை தமிழ் மக்கள் வாக்களித்து தெரிவு செய்திருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பிரதிநிதிகள் தமது மக்கள் நலன்சார்ந்து அவர்கள் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் இவ்வாறான சட்டவிரோத செயல்களுக்கு எதிராக குரல் கொடுக்க முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்." - என்றுள்ளது.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)







தையிட்டி விகாரைக்கு முன்பாக முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டம் பௌர்ணமி தினமாகிய நாளை புதன்கிழமை மாலை 6 மணி வரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்துக்குப் பல கட்சிகளும் பேதங்களின்றி ஆதரவு வழங்கியுள்ளன.

எனவே, தமிழ் மக்கள், தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரையும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு வலுச்சேர்க்குமாறு தையிட்டி விகாரை காணி உரிமையாளர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

# உரும்பிராய் பகுதியில் மோட்டார் சைக்கிளை தீயிட்டுக் கொளுத்திய வன்முறைக் கும்பல்



யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வன்முறைக் கும்பலால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மோட்டார் சைக்கிளின் உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இந்தியத் தூதுவருடன் இ.தொ.கா. பிரதிநிதிகள் சந்திப்பு

கொழும்பு, பெப். 11

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள், இலங்கைகக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர். கொழும்பில் அமைந்துள்ள இந்தியன் இல்லத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளரும் நிதிச் செயலாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் இந்தியத் தூதுவரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

குறிப்பாக இந்தச் சந்திப்பின்போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டது.

அதாவது மலையக மக்களுக்கான காணி உரிமை தொடர்பிலும், இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளுக்கான காணி உரித்தைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.



மேலும் இந்திய அரசின் உதவின் கீழ் மலையகப் பெருந்தோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கல்வி மேம்பாட்டுத் திட்டத்தை (வித்தியாவர்தன) வழங்கி ஆசிரியர்களுக்கான அறிவியல், தொழில்நுட்பம், ஆங்கிலம், கணிதம் ஆகிய துறைகளில் புலமையை அதிகரித்துக் கொள்வதற்காக உதவி வழங்கியமைக்காக இந்திய அரசுக்கு நன்றிகளையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவித்துக்கொண்டனர்.

அதேபோல் பெருந்தோட்ட பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஜீவன் தொண்டமான், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இந்திய அரசிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்திய அரசால் வழங்கப்பட்ட 3 பில்லியன் ரூபா நிதி உதவிக்கான அபிவிருத்தி முன்மொழிவுகளை தற்போதைய அரசினூடாக மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டதுக்கிணங்க கடந்த வருடம் இலங்கை பொருளாதார நெருக்கடியில் காணப்பட்டபோதும், சமீபத்திய வளர்ச்சிக்காகவும் வழங்கிய ஆதரவுக்கும் இந்திய அரசுக்கு நன்றிகளையும் அவர்கள் தெரிவித்துக்கொண்டனர்.

# கொட்டாஞ்சேனையில் ஒருவர் சுட்டுக்கொலை

## பொலிஸ் விசாரணையில் பல்வேறு தகவல்கள்

கொழும்பு, பெப். 11

கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெனடிக் மாவத்தைப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பெனடிக் மாவத்தை பகுதியில் நேற்று இரவு 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர், வீதியில் இருந்த நபர் ஒருவர் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 13, ஜம்பட்டா வீதியில் வசித்து வந்த 43 வயதுடைய நபரே உயிரிழந்தார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சந்தேகநபர்கள் இருவரும் ரி - 56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் பெனடிக்ட் மாவத்தை பகுதியில் உள்ள சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் பாதாள உலகக் கும்பலின் தலைவரான "பலனி ஷிரான் குலோரியன் " என்பவரின் சகாக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரருமான "புகுடுகன்னா" பாலசந்துன் புஷ்பராஜ் ஹேவத் என்பவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்துள்ளார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases

- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments

- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.02.2025 இல் வெளியிடப்பெற்றது.